# திருப்தி தரும் திருப்பதிசாரம் – 3





சுடலைமணி

ஏக்கருக்கு ரூ.37 ஆயிரம் ! 135 நாள் வயது.3 கிலோ விதைநெல்லே போதுமானது.ஏக்கருக்கு மூன்றரை டன் மகசூல்.

நல்ல மண்கண்டம், போதுமான தண்ணீர்வளம் ஆகிய இரண்டும் இருந்தால் போதும்... ஏதாவது மரப்பயிர்களை சாகுபடி செய்து கொள்ளலாம் என்ற எண்ணம்தான் இன்றைக்கு விவசாயிகளின் மனதை பரவலாக ஆக்கிரமித்திருக்கிறது. காரணம்... மற்ற மற்ற விவசாய விளைபொருட்களுக்கு போதுமான விலை கிடைக்காததும்... விவசாய வேலைகளுக்கு ஆள் கிடைக்காததும்தான்!

கன்னியாகுமரி மாவட்டம் இதற்கு நல்ல உதாரணம். எல்லா வளங்களுமே இருக்கும் பூமியாக இருந்தும், மேற்சொன்ன காரணங்களால்... ரப்பரும், தென்னையும்தான் மாவட்டத்தின் பல பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்றன. இப்படிப்பட்டச் சூழ்நிலையிலும் தோவாளை, அகஸ்தீஸ்வரம்... போன்ற பகுதிகளில் விடாப்பிடியாக நெல் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர்... அகஸ்தீஸ்வரம் அருகேயுள்ள வடுகன்பற்று கிராமத்தைச் சேர்ந்த சுடலைமணி. குமரி மாவட்ட நஞ்சில்லா வேளாண்மை சங்கத்தின் துணைத் தலைவராகவும் உள்ள சுடலைமணி, இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்கிறார்.

**படிக்கும்போதே பரிச்சயம்!**

"நான் விவசாயக் குடும்பத்துல பிறந்ததால... சின்ன வயசுல இருந்தே விவசாயத்துல பரிச்சயம் உண்டு. பள்ளிக்கூடத்துல படிக்கும்போது லீவு விட்டா மம்பட்டியைத் தூக்கிட்டு அப்பாகூட வயலுக்குப் போயிடுவேன். படிப்பு முடிஞ்சதும் அரசுப் பணியில் வேலைக்கு சேந்துட்டேன். இருந்தாலும், அப்பப்போ விடாம விவசாயத்தைப் பாத்துக்கிட்டே இருந்தேன். பணியில இருந்து ஓய்வு கிடைச்சதும் முழு விவசாயியா மாறிட்டேன். மொத்தம் பத்து ஏக்கர் இருக்கு. ஆறு ஏக்கர்ல

தென்னை, ஒரு ஏக்கர்ல மாமரம்னு வெச்சிருக்கேன். மீதியிருக்கற மூணு ஏக்கர்ல மரவள்ளி, நெல்லுனு மாத்தி மாத்தி சாகுபடி பண்ணுவேன். இப்போதைக்கு ரெண்டு ஏக்கர்ல மரவள்ளி, ஒரு ஏக்கர்ல திருப்பதிசாரம்-3 ரக நெல் போட்டிருக்கேன்.

அரசாங்கம் அறிமுகப்படுத்துன பசுமைப் புரட்சியால ரசாயன விவசாயத்துக்கு மாறுனவங்கள்ல நானும் ஒருத்தன். வெளிநாட்டுக்காரங்க அங்க எடுபடாத விதையை எல்லாம் வீரிய விதை, மரபணு மாற்றிய விதைனு நம்ம தலையில கட்டி விடுறாங்க. அதையெல்லாம் மண்ணுல கொட்டிக் கொட்டி மண்ணை மலடாக்கி வெச்சிருக்கோம். அதோட விளைவாலதான் இன்னிக்குப் பருவநிலையெல்லாம் தாறுமாறாகிப் போய்க் கிடக்கு. இதுக்கெல்லாம் ஒரே தீர்வு இயற்கை விவசாயம்தான்கிறதுல பூரண நம்பிக்கையோடதான் களத்துல இறங்கினேன்.

**வைக்கோலுக்கு அம்பை... மகசூலுக்கு திருப்பதிசாரம்!**

முழுஇயற்கைக்கு மாறி அஞ்சு வருஷம் ஆகுது. தொழுவுரத்துக்காக மாடுகளையும் வளர்த்துக்கிட்டிருக்கேன். நெல் அறுவடையில கிடைக்கிற வைக்கோலை மாடுகளுக்குத் தீவனமா பயன்படுத்திக்குவேன். அம்பை-16 ரக நெல்லுல வைக்கோல் அதிகமா கிடைக்கும். அதனால, எப்பவுமே ஒரு போகம் அந்த ரகத்தைப் போட்டுடுவேன். அடுத்த போகம்தான் திருப்பதிசாரம் ரகத்தைப் போடுவேன். இதுல மகசூல் அதிகமா கிடைக்கும். நெல்லைப் பொருத்தவரை ஒற்றை நாற்று நடவு முறையிலதான் சாகுபடி செய்றேன்" என்ற சுடலைமணி ஒரு ஏக்கர் வயலுக்கான சாகுபடிப் பாடத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

**நவம்பர் மாதம் நடவுக்கேற்ற மாதம்!**

'திருப்பதிசாரம்-3 ரக நெல்லுக்கு வயது 135 நாட்கள். நடவுக்கு ஏற்றது... நவம்பர். ஒற்றை நாற்று முறையில் ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய வேண்டுமானால், ஒரு செண்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். மூன்று கிலோ விதைநெல் தேவைப்படும். தரமான விதைநெல்லைத் தேர்வு செய்வது முக்கியம்.

**பதர் நீக்க உப்புக்கரைசல்!**

பத்து லிட்டர் தண்ணீரில், ஒரு கிலோ உப்பைப் போட்டு நன்றாகக் கரைத்து, அதில் விதைநெல்லைக் கொட்டி அலசிவிட வேண்டும். சிறிது நேரம் கழித்து மேலே மிதக்கும் பதர்களை அப்புறப்படுத்தி விட்டு, அடியில் தங்கிய நெல்லை மட்டும் எடுத்து முளை கட்ட வைக்க வேண்டும்.

**வேரைக் காக்கும் சாக்குப்பை!**

நாற்றங்கால் அமைக்க தேர்வு செய்த நிலத்தில் வரிசை வரிசையாக நைலான் சாக்குப்பையை விரிக்க வேண்டும். ஒவ்வொரு வரிசைக்கும் ஓர் அடி இடைவெளி இருக்க வேண்டும். பின், சாக்குப்பைகளின் மீது பொடித்த உலர்ந்த சாணத்தை ஒரு சென்டி மீட்டர் உயரத்துக்குப் பரப்ப வேண்டும். பைகளுக்கு இடைவெளியில் உள்ள மண்ணை (சேறு போல உள்ள நெல் வயலின் மேல் மண்) வழித்து, உலர்ந்த சாணத்தின் மீது போட வேண்டும். இப்போது பைகளுக்கு இடையில் இருந்த இடைவெளி வாய்க்கால் போல மாறியிருக்கும். பின் விதைநெல்லைத் தூவி விட வேண்டும்.

மறுநாள் பூவாளியில் தண்ணீர் தெளிக்க வேண்டும். விதைத்த 3-ம் நாளில் வாய்க்கால் போல இருக்கும் இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும். 6-ம் நாள் வரை எப்போதும் நாற்றங்கால் பாத்திக்குள் சாக்குப்பையின் உயரத்துக்கு தண்ணீர் நிற்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாத்தி முழுவதும் நீர் நிரப்பி, சிறிது நேரம் நிறுத்தி மண் முழுவதும் நன்கு ஈரமான பின் நீரை வடித்து விட வேண்டும். நைலான் சாக்கின் மீது நாற்று பாவும்போது, அவற்றின் வேர் மண்ணுக்குள் போவது தடுக்கப்படும். அதனால் நாற்றைப் பிடுங்கி நடும்போது வேர் சேதமடையாமல் இருக்கும். 13-ம் நாளில் நாற்று நடவுக்குத் தயாராகி விடும். 15-ம் நாளுக்குள் நடவு செய்துவிட வேண்டும். நாற்று தயாராகிக் கொண்டிருக்கும்போதே வயலையும் தயார் செய்துவிட வேண்டும்.

**25 சென்டி மீட்டர் இடைவெளி!**

வயலில் டிராக்டர் மூலம் இரண்டு உழவு ஓட்டி, ஒரு வார இடைவெளியில் மீண்டும் இரண்டு உழவு ஓட்ட வேண்டும். பிறகு, ஐந்து நாட்கள் கழித்து நான்கு டன் தொழுவுரத்தைக் கொட்டி இறைத்து இரண்டு உழவு ஓட்டி, தண்ணீர் கட்டி வயலைச் சேறாக்க வேண்டும். பிறகு, வரிசைக்கு வரிசை, பக்கத்துக்குப் பக்கம் 25 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு ஒவ்வொரு நாற்றாக நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து காய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்க வேண்டும்.

**3 முறை களை... 2 முறை மீன் அமிலம்!**

நடவு செய்த 10, 25, மற்றும் 40-ம் நாட்களில் களையெடுக்க வேண்டும். 20 மற்றும் 40-ம் நாட்களில் 75 லிட்டர் தண்ணீரில் 750 மில்லி மீன்அமினோ அமிலத்தைக் கலந்து வயல் முழுவதும்

தெளிக்க வேண்டும். 45-ம் நாள் 25 கிலோ வேப்பங்கொட்டையைப் பொடித்து, வயல் முழுவதும் பரவலாகத் தூவ வேண்டும்.

| ஒரு ஏக்கரில் திருப்பதிசாரம்-3 ரக நெல் சாகுபடி செய்ய சுடலைமணி சொல்லும் செலவு-வரவுக் கணக்கு | | |
|---|---|---|
| விவரம் | செலவு | வரவு |
| உழவு | 2,000 | |
| விதைநெல் | 60 | |
| நடவு | 2,000 | |
| களை | 1,500 | |
| இடுபொருட்கள், தொழுவுரம், பூச்சிவிரட்டி மற்றும் தெளிப்பு | 7,000 | |
| அறுவடை | 2,250 | |
| 3,500 கிலோ நெல் மூலம் வரவு | | 52,500 |
| மொத்தம் | 14,810 | 52,500 |
| நிகர லாபம் | | 37,690 |

**பூச்சிக்குப் புகையிலைச்சாறு!**

இயற்கை முறை சாகுபடி என்பதால், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள் அதிகமாக இருக்காது. சில வேளைகளில் 50-ம் நாளுக்கு மேல் குருத்துப் பூச்சி மற்றும் கதிர் நாவாய்ப் பூச்சிகளின் தாக்குதல் இருக்கக்கூடும். அதனால், 50-ம் நாளில் மூலிகைப் பூச்சிவிரட்டி மற்றும் புகையிலைச்சாறு (பார்க்க, பெட்டிச் செய்தி) ஆகியவற்றைத் தெளித்தால்... பூச்சிகள் அண்டாது. இதன் பின் வேறு பராமரிப்புகள் எதுவும் தேவையேயில்லை. தண்ணீர் மட்டும் பாய்ச்சி வந்தால் போதும். 135-ம் நாள் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராகி விடும்.'

**தூருக்கு 22 சிம்பு... ஒரு சிம்புக்கு 340 மணி!**

சாகுபடிப் பாடம் முடித்த சுடலைமணி, மகசூல் மற்றும் வருமானம் பற்றிப் பேச ஆரம்பித்தார். "ரசாயன முறை விவசாயத்தைவிட இயற்கை முறை சாகுபடியில அதிக தூர்கள் பிடிக்குது. ஒரு தூருக்கு 22 சிம்புகள் வரை இருக்குது. ஒரு சிம்புல 340 நெல்மணிகள் வரை இருக்குது. போன வருஷம் திருப்பதிசாரம் ரகத்துல மூணரை டன் மகசூல் கிடைச்சுது. இந்த வருஷம் பயிர் விளைஞ்சு நிக்குறத பாக்குறப்போ இன்னமும் கூடுதல் மகசூல் கிடைக்கும்னு எதிர்பாக்குறேன். இந்த ரக நெல்லுக்கு குறைந்தபட்சம் கிலோவுக்கு 11 ரூபாய் வரை விலை கிடைக்கும். நான்

நாகர்கோவில்ல இருக்கற இயற்கை அங்காடியிலதான் விற்பனை செய்யுறேன். கிலோவுக்கு 15 ரூபாய் கொடுக்குறாங்க. மூணரை டன் மகசூல்னு வெச்சிக்கிட்டாலே 52,500 ரூபாய்க்கு விற்பனை செய்யலாம். எல்லாச் செலவும் போக 35,000 ரூபாய்க்கு மேல லாபம் கிடைக்கும்" என்றார், மகிழ்ச்சியுடன்!

**தொடர்புக்கு**

சுடலைமணி,

அலைபேசி: 94877-80173